[12th July 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் இனிஷியேடிவ் எடுத்துக் கொண்டால் மேற்கொண்டு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்.

Government servants (Code of conduct)

* 266 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

whether there is any proposal to evolve a code of conduct for Government servants that they should not directly or indirectly be partisans to any activities promoting national disintegration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government servants are aware that the Government Servants' Conduct Rules prohibit them from taking part in any political activity. Hence it is not necessary to issue any separate instructions in this regard.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஏற்கனவே இருக்கக்கூடிய விதிமுறைகள் பிரகாரம் நான் கேட்டிருக்கக்கூடிய "கோட் ஆப் காண்டக்ட்" இப்பொழுது புதிதாக வேண்டுமென்ற அவசியமில்லை என்று அரசாங்கம் உணர்ந்தாலும், அந்த 'கோட் ஆப் காண்டக்ட்'படி ஏதேனும் அதிகாரிகள் கண்டிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "கோட் ஆப் காண்டக்ட்" என்று ஒன்றும் இல்லை. "கவர்ன்மெண்ட் சர்வென்ட்ஸ் காண்டக்ட் ரூல்ஸ்"படி, பழைய விதிப்படி, யார் தவறுதலாக நடந்தாலும் அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. யார் யார் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்க ஊழியர்கள் ஒழுங்கு விதிகள் நம் அரசியல் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு பிறப்பிக்கப்பட்டன. அரசியல் சட்ட 309 பிரிவுபடி சர்க்கார் ஊழியர்களை நியமிப்பது, அவர்களின் ஒழுங்கு விதிகள், வேலை முறைகள் இவை குறித்து சர்க்கார் சட்டம் இயற்றியிருக்க வேண்டும். வருடங்கள் 12 ஆகியும் அத்தகைய சட்டம் ஒன்றைக் கொண்டு வராததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி கேட்டால் விடை அளிக்கலாம்.

திரு. வை. சங்கரன் : நாட்டைப் பிரிக்கவேண்டுமென்று ஒரு வாதத்தை அரசியல் கட்சி என்ற முறையில் இல்லாது வேறு வகையில் முறையிட யாராவது கிளர்ச்சியோ, ஆர்பாட்டமோ நடத்தினால் அதில் கலந்து கொள்ள இப்பொழுதுள்ள விதிகள் இடம் அளிக்குமானால், நாட்டுப் பிரிவினை கோரும் எந்தவிதமான ஆர்பாட்டத்திலோ கிளர்ச்சியிலோ கலந்து கொள்ளக்கூடாது என்று விதிகளை மாற்ற சர்க்கார் உத்தேசிக்குமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

12th July 1962]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்காக விதிகளை மாற்ற வேண்டிய அவசியமில்லை. இதுபற்றிய நிலைமையை நேற்றே விளக்கியிருக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்க ஊழியர்கள் ஒழுங்கு விதிகள்படி அரசியல் நடவடிக்கைகளிலோ அல்லது வேறு நடவடிக்கைகளிலோ பங்கெடுத்துக்கொண்டதற்காக பொதுத தேர்தலுக்குப் பிறகு எவ்வளவு பேர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? அவர்கள் எந்தெந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

Essential Commodities (price control)

* 266-A *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken to check the rise in the prices of essential foodgrains and food articles?

THE HON. SRI P. KAKKAN : The steps taken by the Government to check the rise in the price of essential foodgrains and food articles are :

(1) Supply of rice through fair price shops at fair prices from out of the stocks made available by the Central Government;

(2) Sale of wheat through shopkeepers authorised by the Collectors and District Revenue Officers;

(3) Sale of rice, toor-dhal, chillies, tamarind, salt, sugar, coffee seeds, tea, gingelly oil, groundnut oil and kerosene at fair price through ten retail shops in the City of Madras under the pilot scheme for distribution of these articles to the public through Consumers' Co-operative Stores.

திரு. வை. சங்கரன்: இதுபோன்ற "கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி"களை சென்னையில் மட்டுமல்லாது மதுரை போன்ற "முபஸல்" நகரங்களுக்கும் விஸ்தரித்து நடுத்தர வர்க்கத்தினர், நடுத்தர உத்தியோகஸ்தர்கள் போன்றவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், அரிசி, விறகு, புளி, பருப்பு, எண்ணை போன்ற அத்தியாவசியப் பொருள்களை—அந்தந்தக் காலங்களில் மலிவாக வாங்கி பின்னால் விற்பது குறித்து விரிவாக திட்டம் போட்டு அமுலாக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த முறையை ஒரு வருடத்திற்குப் பரீட்சார்த்தமாகப் பார்க்கலாம். நஷ்டம் இல்லாமல், லாபம் இல்லாமல் மக்களுக்கு உதவி செய்யலாம் என்ற முறையில் இது கையாளப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை போன்ற இதர நகரங்களுக்கு இதை நீடிக்க முடியுமா என்று கேட்கிறார்கள் அதுபற்றிப் பின்னால்தான் பரிசீலனை செய்ய முடியும்.